**செய்தி வெளியீடு எண்: 99/2025** **நாள்: 03.12.2025**

## பத்திரிக்கைச் செய்தி

## சென்னை மெட்ரோவின் விம்கோ நகர் பணிமனையில் 1 லட்சம் சதுர அடியில் வர்த்தகப் பகுதி! உரிமம் வழங்க சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளது!!

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், விம்கோ நகர் பணிமனை மெட்ரோ இரயில் நிலையத்தில் சுமார் 1 லட்சம் சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள வணிகக் கட்டுமானப் பகுதிக்கு உரிமம் வழங்குவதற்காக ஒப்பந்தப்புள்ளியை கோரியுள்ளது. வட சென்னையில் உள்ள மெட்ரோ நிலையத்திற்குள் இருக்கும் பெரிய அளவிலான மேம்பாடுகளில் இந்த முன்மொழியப்பட்ட மேம்பாடு ஒன்றாகும். இது எதிர்கால தேவைகளுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு வர்த்தக சூழலாகும். சில்லறை விற்பனை, அலுவலக இடங்கள், பல்பொருள் அங்காடிகள், உணவு விடுதிகள், உடற்பயிற்சி மையங்கள், பயிற்சி மையங்கள், பொழுதுபோக்கு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள் மற்றும் பல வணிகங்களை அமைப்பதற்கு இது மிகவும் உகந்த இடமாக இருக்கும். உரிமம் பெறுபவர் இந்த இடத்தை தங்கள் சொந்த பயன்பாட்டிற்காக பயன்படுத்தலாம் அல்லது பிற வணிக நிறுவனங்களுக்கு உட்புற வாடகைக்கு விடலாம்.

முன்மொழியப்பட்ட இந்த இடம், சென்னை விமான நிலையம், சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் மற்றும் பல முக்கிய மையங்களை இணைக்கும் சென்னை மெட்ரோ இரயிலின் நீல வழித்தடத்துடன் இணைப்பைக் கொண்டுள்ளது. இந்த இடம் திருவெற்றியூர், எண்ணூர், விம்கோ நகர் உள்ளிட்ட வளர்ந்து வரும் குடியிருப்பு மற்றும் தொழில்துறை பகுதிகளைச் சுற்றியுள்ளதால், அதிக எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களை ஈர்க்கும் திறன் கொண்டது. அனைத்து அடிப்படை உபயோகத்திற்கும் தேவையான வசதிகளுடனும், இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு போதுமான வாகனம் நிறுத்தும் இடத்துடன் வழங்கப்படும்.

நீண்ட கால ஒப்பந்த அடிப்படையில் (15 ஆண்டுகள் + மேலும் 5 ஆண்டுகள்) ஒரு மாதத்திற்கான அடிப்படை விலை, ஒரு சதுர மீட்டருக்கு ரூ.349/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இடத்தைப் பெறும் உரிமதாரர் தங்கள் தேவை மற்றும் வடிவமைப்பிற்கு ஏற்ப உட்புற அலங்காரங்களை செய்து கொள்ளலாம்.

அரசு இணையதளம் (eprocure.gov.in) வழியாக வெளிப்படையான ஒப்பந்த செயல்முறை (ஒப்பந்தம் மற்றும் மின்-ஏலம்) மூலம் இந்த இடம் வழங்கப்படும்.

e-Tender ID: 2025_CMRL_882427_1; Tender Document ID: CMRL/BD/Retail-6/2025/482/07. ஒப்பந்த படிவங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி டிசம்பர் 18, 2025. மேலும் விவரங்களுக்கு marketing@cmrl.in என்ற மின்னஞ்சலில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தை தொடர்பு கொள்ளலாம்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மெட்ரோ நிலையங்கள் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுலும், பயணச்சீட்டு வருவாய் அல்லாத பிற வருவாயை (Non-Fare Revenue) அதிகரிப்பதற்காக, உலகத்தரம் வாய்ந்த வணிக வளாகங்கள், சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் பொது உள்கட்டமைப்பை உருவாக்கி வருவதில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. ஏற்கனவே மெட்ரோ இரயில் பாதைகள் முழுவதும் பல வணிகத் திட்டங்கள் செயல்பாட்டில் இருந்தாலும், விம்கோ நகர் திட்டம் ஆனது, அண்மைக் காலங்களில் வட சென்னையில் திட்டமிடப்பட்ட மிகப் பெரிய வளர்ச்சித் திட்டங்களில் ஒன்றாகத் தனித்து நிற்கிறது.

**வெளியீடு: மக்கள் தொடர்பு துறை,**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**